ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

यो यो नाथो भवति भुवने यस्य यस्य प्रमोदात्
तत्तद्रक्षां कलयितुमसौ जागरूको नितान्तम् ।
त्वां तादृक्षं गिरिश वयमप्यात्मनाथाप्यनाथं
सन्तप्तास्म: भवदवशिखाज्वालयाऽनाथवद्वा ॥

யோ யோ நாதோ பவதி புவநே யஸ்ய யஸ்ய ப்ரமோதாத்
தத்தத்ரக்ஷாம் கலயிதுமஸௌ ஜாகரூகோ நிதாந்தம் ।
த்வாம் தாத்ருக்ஷம் கிரிஶ வயமப்யாத்மநாதாப்யநாதம்
ஸந்தப்தாஸ்ம: பவதவஶிகாஜ்வாலயாऽநாதவத்வா ॥

உலகில் எந்தெந்த வஸ்துவிற்கு எவனெவன் எஜமானனுக இருக்கிருனே அந்தந்த வஸ்துவை ரக்ஷிப்பதற்கு அதற்குரிய எஜமான் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து தவருமல் பாதுகார்க்கிருன். ஹே கிரிச ! கைலாஸபர்வதத்தில் உல்லாஸமாய் வஸிக்கும் சந்திரசேகரா ! ஆத்மநாதர் என்கிற பெயரால் ஸகல ஜனங்களுக்கும்எஜமான் என்று பிரஸித்திபெற்று விசேஷமான சக்தியையுடையவரும் எங்களுக்கு எஜமானனுன உம்மையடைந்தும் எங்களுடைய கஷ்டங்கள் நிவர்த்தியாகாமல் ஸம்ஸாரமென்கிற காட்டுத்தீயினுடைய ஜ்வாலையால் ரக்ஷிப்பதற்குப் பிரபுவில்லாதவன்போல் மிகவும் தபிக்கப்பட்டவர்களாக ஆகிறோம். இது உண்மையே.

ஒரு பக்தர் ஸ்ரீ பகவானிடம் அடியில் வருமாறு பிரார்த்திக்கிருர். ஆடு, மாடு, குதிரை முதலிய பிராணிகளுக்கு எஜமானனுயிருக்கும் ஒருவன் அவைகளுக்கு எவ்வித சிரமமேற்பட்டாலும் அதை உடனே போக்கடித்து ஸௌகியமாயிருக்கும்படி எப்படி ரக்ஷிக்கிருனே, அவ்விதம் பசுபதி என்கிற திருநாமத்தால் ஸகலப்பிராணிகளுக்கும் எஜமானனுய் விளங்கும் ஹே பரமேசுவர ! உம்முடைய ஸொத்தாயும் உம்மைச் சரணமாக அடைந்தவனுயுமிருக்கும் என்னைப்பாதுகார்க்காமல் நீர் அநாதரவாயிருப்பதால் ஸம்ஸாரமென்கிற காட்டுத்தீயால் தாபத்தை அடைந்தவனுய்க்கொண்டு நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். நீர் இவ்விதம் இருப்பது உசிதமில்லை.

சுபம் !

உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

பிரபவ-௵ மாசி-௴ ௨௫

ஸம்ஸ்காரம்.

6-வது அன்னப்பிராசனம்.

(69-வதுபக்கத்தொடர்ச்சி)

சுத்தமான ஆஹாரங்களைப் புசித்தாற்றான் மனது சுத்தமாயிருக்கும். மனதுசுத்தமாயிருந்தாற்றான் நல்லறிவுண்டாகி, அதன் மூலமாகசுலபமானஇச்சைஏற்பட்டுஅதற்கனுகூலமான நல்லகாரியங்களில் பிரவிருத்தியுண்டாக இஹபரசிரேயஸ்ஸுண்டாகும்அதற்காக துஷ்ட ஆஹாரங்களை விலக்கவேண்டும். இது அன்னப்பிராசன காலந்தொடங்கியே கவனிக்கப்படவேண்டும். அதற்குமுந்தி அன்னையினது சுத்தமான ஆஹாரமே சிசு கர்ப்பத்திலிருந்தபோதும் அதை விட்டு வெளிப்பட்டு அன்னத்தைப் புசிக்கும் ஸமயம் வருமளவும் அந்தக் குழந்தையின் மனது சுத்தமாவதற்குக் காரணமாகும். ஆகவே ஆஹாரதோஷங்களை விலக்குவது அவசியமானது; அன்னதோஷத்தால் மனது கெட்டுப்போகும்; பற்பல பிணிகளுண்டாகும்; அகாலமரணமும் நேரிடும்; இது நமது சுருதி ஸ்மிருதிகளில் கூறப்படுவதுபோல் வைத்திய நூல்களிலும் கூறப்படுகின்றது. அதாவது— ஸ்வபாவத்தாலேயே துஷ்டமானது கிரியையால்துஷ்டமானது, காலத்தால்துஷ்டமானது, வேறுவஸ்துக்களின் சேர்க்கையால் துஷ்டமானது, ஆசிரயமான சொந்தக்காரனது தோஷத்தால் துஷ்டமானது என்பதாதியாக அந்த துஷ்டமான ஆஹாரம் பலவகைப்படும். அவற்றுள் இயற்கையாகவே துஷ்டமானது உள்ளி, வெங்காயம் முதலியவையாம். பதிதன், சண்டாளன், நாய் முதலியவைகளால் பார்க்கப்பட்டது கிரியையால் துஷ்டமானதாம். நெய், எண்ணை முதலிய ஸ்னேகபதார்த்தம் சேர்க்காமல் வெகு காலம் வைத்திருப்பது காலத்தால் துஷ்டமாகும். ஸுரை, உள்ளி, வெங்காயம், முதலியவை சேர்ந்ததும் ஸ்வபாவத்தில் சுத்தமாயிருப்பினும் சேர்க்கத்தகாததாகக் குறிக்கப்பட்டவை சேர்ந்ததும், சேர்க்கையால் துஷ்டமாகும். எந்த ஆஹாரம் பார்க்கப்படும்பொழுது மனதில் சங்கையோ, வெறுப்போ உண்டாகின்றதோ அதுவும் துஷ்டமாம். சொந்தக்காரன்

விலக்கப்பட்ட ஜாதியுள்ளவனுகவாவது விலக்கப்பட்ட ஆசிரமத்தை யுடையவனுகவாவது மற்றும் பலவகையாக விலக்கப்பட்ட வகுப் பில் சேர்ந்தவனுகவாவது இருந்தால் அவனது அன்னம் ஆசிரய துஷ்டமாம். நான்காவது ஜாதியும் பாபிகளாயிருந்தால் மூன்று வது இரண்டாவது ஜாதியும் பாபிகளாயும் சிரத்தையில்லாமல் லோ பிகளாயுமிருந்தால் முதல் ஜாதியாரும் போஜன விஷயத்தில் வில க்கப்பட்ட ஜாதிகளாம். வானப்ரஸ்தர்களும் ஸன்னியாசிகளும் ஆசிரமத்தில் விலக்கப்பட்டவர்கள். அதாவது இவர்களது அன் னத்தை புசிக்கக்கூடாது. சேர்க்கை தோஷத்தைப்பற்றி அஷ் டாங்க ஸங்கிரஹத்தில் விருத்தான்ன விக்ஞானீயம் என்ற அத்தி யாயத்திலும் சரகசம்ஹிதையில் பலவிடங்களிலும் விரிவாகக்கூற ப்பட்டிருக்கின்றது. ஆங்கு விலக்கப்பட்டவைகளை விலக்கிவிட வேண்டும். யோக்கியமாக விதிக்கப்பட்டுள்ளதைப் புசிக்கவேண் டும். புசிக்கப்பட்ட அன்னத்தின் ஸாராம்சம் மனதிற் சேறுகின்ற தாம். அதனுல் அது சத்வகுணம் மிகுந்ததாகின்றது. அதனுல் பகுத்தறிவுஉண்டாகின்றது. அதனுல் அற்பப்பயன்களின் வெறுப் புண்டாகின்றது. அப்பொழுது நித்தியவஸ்துவிலாசை மேலிடு கின்றது. அதனுல் பெரியோர்களைத்தேடி ஸேவித்து அவரது உபதேசம் பெற விரும்புகிறுன். அவ்வுபதேசத்தால் ஸம்சயம் விபரீதஞானம் விலகி நிச்சயமான உண்மை அறிவுண்டாகின்றது, அதனுல் அக்ஞானம் விலகி நித்தியமான சிரேயஸ்ஸு கிடைக் கின்றது. இவ்வளவுக்கும் ஆஹார சுத்தியே மூலகாரணமாகின் றது. ஆஹாரசுத்தியில்லாமையாற்றுன் சிலர் ஸாதுக்களை தூஷிப்ப தும்பெரியோர்களைப் பழிப்பதும் துராசாரங்களை அனுஷ்டிப்பதும் தான் கெட்டதுமின்றி அன்னியர்களைக் கெடுப்பதுமான வழக் கத்தைக் குலவிரதமாகக் கொண்டாடுகின்றனர். தற்காலத்தில் மனிதர்களுக்கு ஆஹாரதோஷத்தால் புத்தி சக்தி குறைந்து கெ ட்டுப்போயிருக்கிறதுமின்றி சரீரசக்தியும் குறைந்து புருஷனுயப் பிறந்தும் புருஷத்தன்மையில்லாமல், புத்தி பலமும் சரீரபலமும் இல்லாமையால் அபலைகளெனக் கூறப்படும் ஸ்திரீகளின் பேச்சுக் கடங்கி நிற்கும்படியான நிலைமையும் நேர்ந்து வருகின்றது. அங் ஙனம் நேராமல் எல்லோரும் சுத்தாஹாரத்தைப் புசித்துச் சித்த சுத்தியடைந்து பாம்பரையாக சிரேயஸ்ஸை அடைவார்களாக. இனி சௌளத்தை நிரூபிப்பாம். சுபம் பத்திராதிபர்.

டாக்டர் முத்துலெக்ஷ்மி ரெட்டியால் விவாஹவயது மசோதா ஆக்ஷேபணைகளுக்குக் கூறப்பட்ட பதில் சரியல்ல.

(87-வது பக்கத்தொடர்ச்சி)

இதுவரையில் பால்ய விவாஹத்தாலே பல ஸ்திரீகள் கர்ப வதியாகிப் பல குழந்தைகளையுண்டுபண்ணி ஸௌக்கியமாயிருக்கிறவர்களை ஏன் இவர்கள் பார்க்கவில்லையோ தெரியவில்லை. இவர்கள் அபிப்பிராயப்படி 16-வயதிற்கு விவாஹமாய் கர்ப்பமேற்பட்டால் அந்த ஸ்திரீக்குப் பிரஸவகாலத்தில் யாதொரு சிரமமும் ஏற்படாதென்று இவர்களால் எப்படிக் கூறமுடியும். எவ்வளவு வயதானலும் பிரஸவகாலத்தில் சில ஸ்திரீகளுக்கு அதிக சிரமம் நேருகிறதென்பது அனுபவத்தில் தெரிகின்றது. அதற்குக்காரணம் அவரவர்களுடைய கர்மா வேயல்லாமல் பால்யவிவாகமா காரணம் ஸரியான யௌவன வயதில் கர்ப்பம் தரித்தாலும் சிலர் பிரஸவிக்க முடியாமல் மரித்து விடுகிறார்கள். டாக்டர்களுக்கு இது நன்றாய் தெரிந்த விஷயமே எவ்வளவு சிரமபபட்டும் ஸாத்தியப்படாமல் தவறிப்போகின்றன. இவ்விதம் பல காரணங்களாலேற்படும் தோஷத்தின் காரணத்தைக் கண்டுபிடிக்கச் சக்தியில்லாமல் ஏதாவதொரு கெட்டகாரியத்தை நடத்த வேண்டுமென்று தமக்குத் தோன்றும் பிடிவாதத்தை நடத்தவேண்டி அதற்கு சம்பந்தமில்லாத சில காரணங்களைக் காட்டி மற்றுமுள்ளவர்களும் அதை அங்கீகரிக்க வேணுமென்று நிர்ப்பந்தித்தால் அதெங்ஙனம் நடைபெறும்.

முடிவுரையில் தற்காலமுள்ள நிலைமையைக் கவனிக்காமல் ஏதோஒருகாலத்தில்எவராலோஎழுதிவைக்கப்பட்ட கர்நாடகப்புத்தகங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டிக்கொண்டிருப்பதைவைதீகர்கள்விடாமலிருந்தால்நான்பிராமணஸமூஹத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஸ்திரீகளுடைய நலத்திற்காகவும் எதிர்கால சந்ததிகளுடைய நலத்திற்காகவும் ஒன்று செய்யவேண்டியதாயிருக்கும். அதாவது மிஸ். மேயோ பால்யவிவாகக் கேடுகளைப் பற்றியும் தனது பலஹீனமான சரீரத்தையும் எளிய உணவையும் மதித்து பிர்மசர்யவிரதத்தை அனுஷ்டிக்க வேண்டி

யிருக்க அவ்வாறு செய்யாமலிருப்பதினால் பிராமண வாலிபர்களுக்கு நேரும் கேடுகளையும் பற்றி கூறியிருப்பனவற்றிற்குப் பல ஆதாரங்களைக் காட்டும் ஜாப்தாவைப் பிரசுரிக்க வேண்டியவளாக இருப்பேன் என்று முடிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் முத்துலெக்ஷ்மி தேசாந்திரத்தில் நடக்கும் விவாகத்தைப் போல் இங்கும் பிராமண ஜாதிகளில் போகத்திற்காக மாத்திரம் விவாகம் நடைபெறுவதாகக் கருதி அதின் தத்துவத்தை நன்குணராமல் இவ்விதம் கூறியிருக்கிறார். பிராமணன், க்ஷத்ரியன், வைசியன், முதலானவர்களுக்கு விவாகமென்கிற இந்தக் கர்மாவானது இவ்வுலகிலும் பரலோகத்திலும் விசேஷமான சிரேயஸ்ஸைப் பெறவேண்டி சிறந்த தர்மங்களை அனுஷ்டிக்க வேண்டியே ஏற்பட்டிருக்கின்றது. போகத்தையே முக்கியமாகக்கொண்டல்ல இதுவும் அங்கமாகச்சேருகின்றது. அவ்வித தர்மானுஷ்டானத்திற்குத் தகுதியுள்ள குலம் கோத்திரம் காலம் வயது முதலியவைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் ஆகையால் தான் விவாக காலத்தில் இந்த ஸ்திரீயுடன் கூட நீ தர்மங்களை அனுஷ்டித்துக் கொண்டு சுகமாயிருக்கவேண்டுமென்று கூறுகிறார்கள். ஸ்ரீ ராமருக்கு ஸீதையை விவாஹம் செய்துகொடுக்கும் காலத்தில்ஜனகர்,

इयं सीता मम सुता सहधर्मचरी तव ।

இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ ।

என்று உன்னோடுகூட தர்மானுஷ்டானம்செய்வள் என்று சொல்லியிருக்கிறார். உனக்குப் போகத்திற்காக ஸௌகர்யமாயிருப்பாள் என்று கூறவில்லை. இவ்விதம் தர்மானுஷ்டானத்திற்காக கிரகஸ்தாசிரமம் ஏற்படுகிறபடியால் அதை அடைந்தவர்கள் பிரும்மசாரிக்கு அன்னமிடுதல், சந்யாஸிகளுக்கு பிக்ஷை செய்தல், அதிதிகளுக்கு ஆராதனம் செய்தல், பிதுருகளுக்கு சிராத்தமிடுதல், யாகங்களால் தேவதைகளின் ஆராதனம், மற்றுமுள்ள பல தர்மங்களையும் அனுஷ்டித்துவருகிறார்கள். பிரும்மசாரிகளுக்கும் சந்யாஸிகளுக்கும் இந்த நிர்ப்பந்தமில்லை. இவ்விதம் தர்மானுஷ்டானங்களுக்குப் பொருத்தமாயிருக்கவேண்டுமென்றுதான் விவாகத்தில் பல நியமங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த நியமங்களை விட்டு நம்மிஷ்டம் போல் ருதுவானவளையோ விதவையையோ கெட்ட குலத்திலுண்டானவளையோ நாம் கேவலம் போகத்தை

மாத்திரம் பெரிதாகக்கருதிப் பிறகு நடத்தவேண்டிய தர்மகாரியங்களைக் கவனியாமல் துஷ்ட ஸ்திரீகளை அதாவது தோஷமுள்ள ஸ்திரீகளை விவாகம் செய்துகொண்டால் உடனே தர்மானுஷ்டானங்கள் குன்றிவிடும். தர்மத்திற்குக் குறைவேற்பட்டால் குலத்தைப் பூராவையும் அதர்மம் சூழ்ந்துகொள்ளும். அதர்மவிருத்தியால் உத்தமர்களாய் விளங்கும் ஸ்திரீகளும் தோஷமுள்ளவர்களாக ஆய்விடுவார்கள். ஸ்திரீகள் அவ்விதமானால் வர்ணஸாங்கர்யம் அதாவது ஜாதிப்பிரிவற்றுப்போம். இவ்வித ஸாங்கர்யத்தை உண்டுபண்ணி எவர்கள் குலத்தைக்கெடுக்கிறார்களோ அவர்களுக்கும் அந்தக் குலத்திலுதித்த மற்றுமுள்ளோர்களுக்கும்நாக துக்கத்தை அனுபவிக்கும்படி நேரும் இவர்களுடைய பிதுர்க்கள் தங்களுக்குப் பிண்டம் கொடுக்கக் குடும்பத்தில் வார்ஸு இல்லாமல் நரகத்தில் விழுகிறார்கள். இவ்விதம் ஸ்திரீகளை தோஷமுள்ளவர்களாகச் செய்யக்கூடிய ஒரு கெட்ட கர்மாவை அனுஷ்டிப்பவர்கள் எப்பொழுதும் நாகத்தில்தான் வஸிப்பார்கள் என்று கீதாசாஸ்திரத்தில் முதல் அத்தியாயத்தில் 40-வது சுலோகம் முதல் 44-வது சுலோகம் வரையில் அர்ஜுனனால் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கின்றது. இக்கருத்தைக்கொண்டுதான் மனுவும் விவாகத்தை எட்டுவிதமாகப் பிரித்து பிராம்ம முதலான நான்கும் சிறந்தது. அந்த விவாகத்தால் ஏற்படும் ஸந்ததிகள் முறையே தம் குடும்பத்திலுள்ள 20, 16, 12, 8 பிதுருக்களை உத்தமலோகத்தை அடையும்படி செய்கின்றனவென்று செப்பியிருக்கிறார். இவ்விதம் உலகிலுள்ள ஜனங்களுடைய க்ஷேமத்தை உத்தேசித்து முக்காலங்களையும் நன்குணர்ந்த கருணைக்கடலான மஹரிஷிகள் சொல்லியிருக்கும் விதிகளை சரியல்லவென்று அவர்களுடைய மஹிமையை அற்பங்கூட அறியாதவரும் பெயரைக்கூட உச்சரிக்கத் தகுதியற்றவருமான ஒருவர் தம் ஊனக்கண்ணால் ஆபாஸமாயும் நச்வரமாயுமுள்ள இரண்டொரு விஷயத்தை அறிந்ததுபோல் தாமாகத் தமக்குப்பெருமையைக்கொடுத்துக்கொண்டு உலக க்ஷேமத்தின்பொருட்டுத் தாம் அவதரித்திருப்பதாகவும் கருதிக்கொண்டு போலி வேஷம்பூண்டுஉண்மையில்லோகக்ஷேமத்திற்குப் பாடுபட்டிருக்கும் நிக்ரஹானுக்கிரகசக்திவாய்ந்த மஹர்ஷிகளால் அனுக்கிரஹிக்கப்பட்ட உத்தமமான கிரந்தங்களை பிரவிக் குருடன் உயர்ந்த ரத்னத்தைப்பழிப்பதுபோல், ஏதோஒரு காலத்

தில் எவராலோ எழுதிவைக்கப்பட்ட கர்னடக புஸ்தகங்களிலிருந்து மேற்கோளாக எடுத்துக்காட்டிக்கொண்டிருப்பதை வைதிகர்கள் விடாதிருந்தால்என்று தனக்கிருக்கும் பொருப்பைஅற்பம் கூட யோசித்துப்பார்க்காமல் டாக்டர் முத்துலெக்ஷ்மி வைதீகர்களை கர்ஜிக்க முன் வந்துவிட்டது மிகவும் வியஸனிக்கத்தக்கது.

நவாபு அரசுபுரியுங்கால் நம் ஜாதியையும், மதத்தையும் அடியோடு மாற்றவேண்டுமென்று ஒவ்வொரு கிராமமாய் படையெடுத்துச் சொல்லவொண்ணாத ஹிம்ஸைகளைச் செய்தும் அதை பொருட்படுத்தாமல் தைர்யமாயிருந்து ஜீவித்து விருத்தியடைந்திருக்கும் இந்துமதமும், வைதீககோஷ்டியார்களும் தர்மத்திற்காக எவ்விதக் கஷ்டத்தையும் அனுபவிக்கத் தயாரகவே இருப்பார்கள். இனியும் டாக்டர் முத்து லெக்ஷ்மி போன்றவர்கள் எவ்வளவு சிரமப்பட்டு என்ன நிர்பந்தத்தை தம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து ஏற்படுத்தினாலும் வைதீகர்களானஆஸ்திகஜனங்கள் தங்களாலியன்றவரையில் சாஸ்திர விதியைக் கைவிடத்துணியமாட்டார்கள். தங்களுடைய வைதீக தர்மத்தை ரக்ஷிக்கவேண்டிய விஷயத்தில் அதற்குத் தடையாக ஏற்படும் நிர்ப்பந்தத்தை விலக்கவேண்டி தம் சரீரம் வரையில் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். யாரோ சிலர் இவர்களபிப்பிராயத்தைத் தாங்கிப் பேசுகிறார்கள் என்று நினைத்து வைதிகர்களைத்தவிர உலகம் பூராவும் நம்மை பின்பற்றுகிறார்களென்று இவர்கள் கருதுவது தவறேயாகும். கணக்கெடுத்தால் 100-க்கு 10-க்கூட இவர்களுக்குக் கிடைக்காது. ஆகையால்இவர்களுக்கு ஸம்பந்தமில்லாததும் சாஸ்திர ஸம்பந்தமுமான இந்த மாதிரி விஷயங்களில் மெம்பர்கள் தலையிட்டுக்கொண்டு தாமும் கஷ்டப்பட்டு வைதீகர்களையும் தூஷித்து சாஸ்திர நிந்தனையும் செய்து வீணில் பாபத்திற்குள்ளாகாமல் தாங்கள் அவசியம் கவனிக்கவேண்டிய லோகவிஷயங்களை மாத்திரம் கவனித்து அவ்வக்காலங்களில் ஜனங்களுக்கு க்ஷேமத்தையுண்டு பண்ணினால் இவர்களுடைய பெருமைக்குச் சிறுமை ஏற்படாமலிருக்குமாகையால் சீக்கிரம் பகவான் அவ்வித புத்தியை இவர்களுக்குப் புகட்டவேணுமாய் பிரார்த்தித்து இவ்விஷயத்தையும் பூர்த்தி செய்து கொள்ளுகிறேன்.

உபபத்திராதிபர்.

ஓர் ஸந்தேஹம்.

பிரபவ ஸ்ரீ ஆனிமீ இரண்டாவது ஸஞ்சிகையில் மு. ந. ஜானகிராமய்யர் ஸாதாரண க்ஷௌர காலத்தில் லோம (தேகத்திலிருக்கும் மயிர்) வபனம் அவசியமா இல்லையா? என்று சந்தேகித்ததற்கு பிரம்மஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகள் சிகை, முழங்கை, புருவம், முதலிய இடங்கள் தவிர மற்ற இடங்களிலிருக்கும் ரோமாதிகளை வபனம் செய்து கொள்ளவேண்டும் என்று ச்ருதி ஸ்மிருதி பூர்வகமாய் ஸித்தாந்தம் செய்து இருக்கிறார்கள்.

ஸித்தாந்தப் பிரகாரம் முதுகிலிருக்கும் ரோமாக்களைக் கூட வபனம் செய்துகொள்ளவேண்டுமென்று ஏற்படுகிறது. அவ்விதம் சிஷ்டாசாரத்தில் இல்லை

❋ இதனால் முதுகிலிருக்கும் ரோமாக்களை வபனம்செய்து கொள்ளாமலிருப்பதற்கு ஏதாவது ஸ்மிருதி இருக்கிறதா இல்லையா? முதுகிலிருக்கும் மயிர்களை வபனம செய்துகொள்ளுவது அவசியந்தானா? இல்லையா? என்று ஸந்தேஹம் உண்டாகிறது இந்த ஸந்தேகமானது ஆரியதர்மத்தின் மூலமாய் நிவர்த்திக்கப்பட்டால் சிஷ்டர்களுக்கு ஸௌகரியமாயிருக்கும்

M. வாஞ்சிநாதன்,

முடிகொண்டான்

---

* குறிப்பு. இந்த சந்தேகத்திற்கு பதில் சௌளம் என்று நிரூபிக்கப்படும் விஷயத்தில் வரும். ப—ர்.

விவாஹவயது மசோதா கண்டனங்களின்கூட்டங்கள்.

புதுக்கோட்டை சமஸ்தானம், அரிமழம்.

25—2—28-ல் சிவன்கோவிலில் ஸநாதனதர்மத்தில் பற்றுள்ள ஆஸ்திக ஜனங்கள் சகலரும் ஸாயங்காலம் கூடி கானப்பேட்டை ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தர தீக்ஷிதரவர்களால் தற்காலம் இந்தியா சட்டஸபையிலும் சென்னை சட்டஸபையிலும் வந்திருக்கும் விவாஹவயதுமசோதாவினால் விளையக்கூடிய தீமைகளையும் சாஸ்திரங்களின் கருத்துகளுக்கு விரோதமாக இருப்பவைகளையும் பழமையாக அனுஷ்டித்துவந்திருக்கும் பழக்கவழக்கங்களுக்கும் பேதம் என்பதை விவரமாய் எடுத்துச்சொல்ல இந்த விரோதமான மசோதா சட்டமாகக்கூடாதென்று அனைவராலும் ஏகமனதாய் தீர்மானித்து அதை இந்தியா சட்டஸபைக்கும், சென்னை சட்டஸபைக்கும் மஹஜர் செய்துகொள்வதாய் ஒத்துக்கொண்டு கூட்டம் முடிவுபெற்றது.

காமாக்ஷிநாத சாஸ்திரி,

ஜோதிஷம், அரிமழம்.

காட்டுமன்னார்கோவில்:— நாளது மாசி-மீ 9உ மாலை 4-மணிக்கு இவ்வூர் வேத புஷ்கரிணி மண்டபத்தில் ஓர் கூட்டம் கூடிற்று. உள்ளூர் பிராமணர்கள் எல்லாரும் வந்திருந்தனர்; கோவாப்ரேடிவ் பாங்குதலைவர் ஸ்ரீமான் ஸ்ரீரங்காசாரியார் தலைமை வகித்தார்; உள்ளூர் பிரமுகர்கள் நரசிம்மாசாரி, திருவேங்கடாசாரி உமாமகேச்வா சாஸ்திரி இவர்கள் மசோதாவைக் கண்டித்துப் பேசினார்கள்; பிறகு அக்ராஸனர்களால், விவாஹவயதுமசோதாவைத் தள்ளிவிடும்படியாய், சென்னை சட்டஸபைக்கும் டில்லி சட்டஸபைக்கும் தீர்மானங்களை அனுப்பும்படிக்கும் இனியும், இவ்விதத் தீர்மானங்களைக் கொண்டுவாராமலிருக்கும்படிக்கும் மாக்ஷிமைதங்கிய மஹாராணியார் உறுதிமொழிக்கு விரோதமில்லாமலிருக்கும்படிக்கும் கவர்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுவதாய் ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

V. உமாமகேச்வர சாஸ்திரி,
“கோவிந்த விலாஸ்” காட்டுமன்னார்கோவில்.

மன்னார்குடி தாலூகா, ரெங்கநாதபுரம்:—

சென்ற 18—2—28ல் இவ்வூர் ஸ்ரீ ஜம்புநாதஸ்வாமி ஆலயம் வஸந்தமண்டபத்தில் மாலை 3-மணிக்குத் தற்போது கலியின் கொடுமையால் கிளம்பியிருக்கிற விவாஹ வயது மசோதாவைப் பற்றி ஆலோசிக்க ஒரு ஸபை கூடியது.

ஷை ஸபைக்கு ஷையூர் பிராமணகனவான்களும் வைதீகர்களும் வந்திருந்தனர்.

அதில் ப்ரும்மஸ்ரீ கனம் சுவாமிநாதய்யரவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் தற்சமயம் ஸ்ரீ ஹரவிலாஸ் சாரதாவால் டில்லி சட்டஸபையிலும்—ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளால் சென்னை சட்டஸபையிலும் கொண்டுவரப்போவதாக வெளியிட்டிருக்கும், விவாஹவயதுமசோதாவானது சுருதிக்கும் ஸ்மிருதிக்கும் ஸநாதனதர்மத்திற்கும பிராம்மண்யத்திற்கும், ஏற்கனவே காருண்ய கவர்மெண்டாரால், கருணையுடன் கூறப்பட்ட உறுதிமொழிக்கும் முற்றிலும் விரோதமென ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் அவர்களால் கொண்டுவரப்பட்ட பிரேரபணையை அக்கிராஸனர் அவர்களாலும் மற்றுமுள்ள ஸபையோர்களாலும் ஆமோதிக்கப்பெற்று கனம் ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும், கனம் சென்னை கவர்னர் அவர்களுக்கும் எல்லோராலும் கையெழுத்திடப்பெற்ற மஹஜர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

சுப்பிரமணியக் குருக்கள்.

அசேஷவித்வன் மஹாஜனஸபை.

திண்டிவனம் தாலூகா (மொளசூர்) தென்னாற்காடு ஜில்லா.

20—2—28 ஸோமவாரம் பிரும்மஸ்ரீ வெங்கிடகிருஷ்ணய்யர் அவர்கள் கிருஹத்தில் நடத்தப்பட்ட ஸ்ரீமத் ராமாயண சுந்தர காண்டம் பூர்த்தியில் ஸ்ரீராம பட்டாபிஷேக மஹோத்ஸவ வைபவத்தை முன்னிட்டு விஜயம் செய்திருந்த பிராம்மணோத்தமர்கள் முன்னிலையில் திண்டிவனம் பிரும்மஸ்ரீ வித்வத்பூஷணம் பாலகிருஷ்ணசாஸ்திரியார் அவர்கள் அக்கிராஸனத்தை வஹித்து விசேஷ சாஸ்திர உபமானங்களுடன் விவாஹவயதுமசோதா தீர்மானமாகாமலிருக்கவும் இதரமான வைதீக கர்மாவில் பிராம்மணர்கள் அவசியம் நடந்துகொள்ளவேண்டிய விதிகளையும் விவரமாய் உபந்யஸித்துஅச்சுமஹஜரில் ஸபையிலுடையவர்கள்கையொப்பம் வாங்கி தஞ்சாவூர் ஜில்லா மாயவரம் வால்மீகி பிரும்மஸ்ரீ நடேச சாஸ்திரிகள் அவர்கள் மூலமாய் குறிப்பிட்டவர்களுக்கு அனுப்ப வேண்டியதாய் தீர்மானம் செய்து பகவத் பிரார்த்தனை மங்கள ச்லோகத்துடன் ஸபை கலைந்தது.

வெங்கடகிருஷ்ணய்யர், N கிருஷ்ணய்யர். ஹெட்மாஸ்டர்,
வித்வன்மஹாஜன ஸபை. மொளசூர், ஓமந்தூர் போஸ்டு.

விவாகவயதுமசோதா கண்டனமும் பால்யவிவாஹமே உத்தமமென்ற தீர்மானமும்.

21—2—28-ல் பனையப்பட்டியில் பகல் 3-மணிக்கு S. ராமஸ்வாமி அய்யர் அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் உள்ளூர் மஹாஜனங்களும் குழிபுரை, பனையூர், மஹாஜனங்களும் வந்து சபை கூடினார்கள்; ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் படம் வைத்து பூஜை, நிவேத்தியம், தீபாராதனை, உபநிஷத்பாராயணம் நடந்தது; பிறகு பிரும்மஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யர் குருபக்தி என்ற விஷயத்தை உபந்யாஸம் செய்துமுடித்தார்.

பிறகு பிரும்மஸ்ரீ வெங்கடேசய்யர் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்;

(1) தற்காலம் சென்னை சட்டஸபையில் சட்டமாக்கவேண்டுமென்று டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளால் கொண்டுவரப்பட்டிருக்கிற விவாஹவயதுமசோதாவானது ஆஸ்திகர்களான பிராம்மணர்களுக்கு எவ்விதத்திலும் ஸம்பந்தமில்லாததாகவும் சுருதி ஸ்மிருதி ஆசாரங்களுக்கு விரோதமானதென்றும், அது பிராம்மணரல்லாதார் விஷயமென்றும், சுருதியுக்த ஆசாராநுஷ்டானமில்லாதவர்கள் இதில் தலையிடக்கூடாதென்றும், கன்னிகாவிவாஹத்தால் லோகக்ஷேமத்திற்கு ஒரு தடையுமில்லை என்றும் நிச்சயமாகிறது.

(2) கன்னிகாவிவாஹமே அவச்யமென்பதற்கு திருஷ்டார் தம் பிராம்மணரல்லாதாரிலும் கன்னிகைகளுக்கு நல்ல இடமும், ஸௌகர்யமும், நல்ல வரனும் கிடைக்கும் ஸமயங்களில் எத்தனையோ பேர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கன்னிகாவிவாஹம் செய்கிறார்கள்; இப்படியிருக்க ஆஸ்திகர்களான பிராம்மணர்கள் செய்வதில் என்ன தடையிருக்கிறது? கன்னிகாவிவாஹத்தைக் கன்னிகாதானமென்று உத்தமமாய்க் கொண்டாடுகிறார்களே— ருதுமதீதானமென்ற சப்தத்தையே காணோமே?

(3) தசரதர், ஜனகராஜன் இவர்களுக்கு முன்காலம்முதல் இந்த பால்யவிவாகவழக்கம் இருந்துவருகிறது; ஸ்ரீ ராமன் பதினோராயிரம் வருஷம் இருந்திருக்கிறார்; ஸீதை சுமார் 2000-வரு இருந்திருக்கிறாள்: பால்யவிவாஹத்தால் அவர்கள் என்ன கெடுதலை அடைந்தார்கள்?

(4) பூர்வபூர்வமாய் உலகில் பால்யவிவாஹத்தால் நல்ல பலனிருந்துவர அதை அறியாமல் தங்கள் தங்களுக்கு ஏதோ தோன்றியதை ஜனஸமூஹத்தின் பிரீதியில்செலுத்தாமல் ஆஸ்திக ஜனங்களின் மனதைப் புண்படுத்த உபயோகிப்பது உசிதமல்ல.

(5) ஸம்போகவயது நிர்ணயம்:

ஸீதாவிவாஹமானதும் ஸீதை அயோத்திக்கு வந்து ஸ்ரீராமன் வீட்டிலேயே இருந்துவந்ததாகத் தெரிகிறது. ஒரு நாள்கூட மிதிலைக்குப்போனதாகத் தெரியவில்லை. பால்யவிவாஹத்தால் அந்த தம்பதிகளுக்குப் பரஸ்பரம் ஏற்பட்ட பிரீதியால் அவர்கள் பிரியாமல் இருந்திருக்கிறார்கள். ஸீதை சுந்தரகாண்டத்தில் தன் வருத்தத்தை ஹநுமாரிடம் தெரிவித்துக்கொள்ளும் போது சொன்னதாவது—

समाद्वादशतत्राहं राघवस्य निवेशने ।
भुंजानामानुषान्भोगान् सर्वकामसमृद्धिनि ॥

ஸமாத்வாதஶ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஶநே ।
புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ ॥

இதனால் ஸீதைக்கு விவாஹமானதும் ருதுவும் 10-வயதிற்குள் ஏற்பட்டதாகவும் அதுமுதல் மனுஷர்கள் அனுபவிக்கக்கூடிய காமபோக சுகாதிகளை அனுபவித்துவந்தேன் என்று சொன்னதாகக் கண்டோக்தியாக இருக்கிறது. இதனால் பால்யத்திலேயே ஸம்போகவயதும் ஏற்படுகிறது.

விவாஹகாலத்தில் ஸீதைக்கு வயது ஆறென்றும் ராமனுக்கு பதினாறென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

(7) இந்த ஜனகராஜன் தசரதர் இவர்களுடைய தீர்மானத்தால் பெண்களுக்குப்பத்துவயதிற்குள் விவாஹமும் புருஷர்களுக்குப் பதினாறுவயதுமுதல் விவாஹமும் உத்தமமான காலமென்றும் பெண்கள் ருதுவாகிறகாலம்முதலே ஸம்போககாலமென்றும் நிர்ணயமாகிறது. பெண்களுக்கு ருதுவானது மத்தியில் வருவதும் பிறகு கொஞ்சவயதில் போய்விடுகிறதாக இருப்பதால் அது குழந்தைகள் உற்பத்திக்கு ஏற்பட்ட ஒரு பருவகாலமாகிறது. பருவத்தில் பயிரிட்ட நெல்பயிர் முதலியவை பலிப்பதுபோல் ஸ்திரீகளுக்கு பால்யபருவத்தில் உண்டாகும் குழந்தைகள் வீர்யவான்களாயும் அரோகதிருடகாத்திரர்களாயும் இருப்பார்கள்.

(8) உலகத்தில் மனிதர்கள் நீண்டநாள் ஜீவித்திருப்பது, பூர்வபுண்யத்தினாலும், ஈசுவரானுக்கிரகத்தினாலும் ஏற்படவேண்டியது ஆனதால் மனிதன் இவ்வளவு காலந்தான் இருக்கப்போகிறான் என்பது நிச்சயமில்லாத விஷயமானதால் மனிதனுக்கிருக்கும் சுவல்ப வாழ்நாளை வீணாக்காமல் தர்மபத்னியை உசிதகாலத்தில் விவாஹம்செய்து தர்மங்களை நடத்தவேண்டியது அவசியம்.

(9) முடிவுரை:— ஆஸ்திகர்களான நாமும் நமது குழந்தைகளுக்கு ஜனகராஜன் தசரதரைப்போல் பெண்களுக்குப் பத்து வயதிற்குள்ளும் புருஷர்களுக்குப் பதினாறுவயதுமுதலும் விவாஹம் நடத்தி ஸீதாராமனைப்போல் க்ஷேமாரோக்யங்களை அடைவோமாக.

(10) ஸபையோர்கள் இந்தத் தீர்மானத்தை ஏகமனதாய் அங்கீகரித்தார்கள்.

ஸனாதனதர்மத்திற்கு விரோதமாய் ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளால் கொண்டுவரப்பட்டிருக்கும் விவாஹவயது மசோதாவைச் சட்டமாக்காமல் இருக்கவேணுமென்று காருண்யமுள்ள அரசாங்கத்தாரை ஸபையோர்கள் கேட்டுகொள்ளுகிறார்கள்.

கையெழுத்திட்டவர்களின் பெயர்.

ஆம்பரவனி அய்யர்.	நடேசய்யர்,
ஜானகிராமய்யர்,	முத்துகிருஷ்ண கனபாடிகள்,
S. ராமஸ்வாமி அய்யர்,	வெங்கடேசய்யர்,
சு. ப. அ. ராமனாதன் செட்டி,	கொம்மையத்தேவனம்பலகாரன்